# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 3. ஈருருளிகளில் (துவிச்சக்கர வண்டிகளில்) சவாரி செய்தல்

இந்த கோவிட்-19 உலகளாவிய பெருந்தொற்றின் போது ஈருருளிகள் மிகப் பொருத்தமான போக்குவரவு முறையாகப் பரிந்துரைக்கப்பட முடியும். வசதிகள் அனுமதிக்குமானால் இது பரிந்துரைக்கப்படுகின்ற முறையாகும். இருப்பினும் இதில்; குடும்பத்தினர்/ஒரே குழுவைச் சேர்ந்தவர்களைத் தவிர இன்னொருவரை ஏற்றிச் செல்வது ஊக்குவிக்கப்படவில்லை.

**பிரத்தியேக தகவல்கள் / வழிகாட்டல்கள்**

**ஈருருளி ஓட்டுனர்**

- ஏனையவர்களுடன் சந்திப்பு மேற்கொள்வதாயின் ஈருருளி ஓட்டுனர் முகக்கவசம் அணிய வேண்டும்.
- ஈருருளிப் பாதை இருக்குமானால் அதைப் பயன்படுத்துவது எப்போதும் நல்லது.
- சவாரி முடிந்ததும் ஈருருளி ஓட்டுனர் தமது கைகளைக் கழுவ வேண்டும்.
- இயலுமாயின், ஓட்டுனர் சிறிய கை தூய்மிப்பான் ஒன்றினைத் தம்முடன் கொண்டு செல்ல வேண்டும்.
- உடல்நிலை நன்றாக இல்லை என்றால் பயணத்தைத் தவிர்க்கவும் (காய்ச்சல், இருமல் மற்றும் தடிமல்).
- உத்தியோகபூர்வ அடையாள அட்டை இருந்தால் , அதை உங்கள் கழுத்தில் அணியுங்கள், இதனால் காவல்துறையினருக்குக் காட்சிப்படுத்த முடியும்

**அறிவுறுத்தும் முறைகள்**

- பொதுசனத்தொடர்பு ஊடகங்கள்/சமூக ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்.
- முகக்கவசம் அணிய வேண்டும்.
- வந்த பிறகு கைகளைக் கழுவ வேண்டும்.




சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020